தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 27.09.2012 A.M

| 27th Sep 20012 | விவசாயிகளுக்குதொழில்நுட்ப பயிற்சி |
|---|---|

திருவள்ளூர்:பள்ளிப்பட்டு உதவி வேளாண் அலுவலகத்தில், "ஆத்மா' திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது."பூமி' அறக்கட்டளை தலைவர் ஞானசூரிய பகவான் குறைந்த செலவில், அதிக மகசூல் ஈட்டுவது குறித்து விளக்கம் அளித்தார்.இயந்திரம் மூலம் நடவு செய்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.நிகழ்ச்சியில், ஆர்.கே. பேட்டை உதவி வேளாண் இயக்குனர் முகம்மது ரபீக், "ஆத்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர் செல்வ பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியில், ஆர்.கே.பேட்டையைச் சேர்ந்த விவசாயிகள், 60 பேர் பங்கேற்றனர்.

| 27th Sep 20012 | நெல் நடவுக்கு தேவையான உரம் கையிருப்பு உள்ளது:வேளாண்மை துறை அறிவிப்பு |
|---|---|

திருவள்ளூர்:""திருவள்ளூர், காஞ்சி உள்ளிட்ட, ஆறு மாவட்டங்களுக்குத் தேவையான உரங்கள், 20 ஆயிரம் டன் வினியோகிக்கப்பட உள்ளது. தேவையான உரங்களை விவசாயிகள் வாங்கி பயன்படுத்திக் கொள்ளலாம்,'' என, வேளாண்மைத் துறை அறிவித்து உள்ளது.மாவட்டத்தில் சம்பா நெல் நடவு பணிகள் நடக்கிறது. இதற்குத் தேவையான, தழை, மணி, சாம்பல் சத்து தரவல்ல யூரியா, சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்கள், காம்பளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. தனியார் உர விற்பனையாளர்களிடமும் தேவையான அளவு இருப்பு உள்ளது.ஐ.பி.எல்., நிறுவனத்தின் கப்பல், 22 ஆயிரம் டன் யூரியாவுடன், கடந்த, 12ம் தேதி சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளது. இதில் இருந்து 20 ஆயிரம் டன் யூரியா திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் தேவைக்காக வினியோகம் செய்யப்பட உள்ளது. 10 ஆயிரம்

டன் யூரியா, டான்பெட் நிறுவனத்தின் மூலம் வினியோகிக்கப்படும்.விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கிடைக்காமலோ அல்லது அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு கூடுதலாக விற்பனை செய்தாலோ, வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்திற்கு (044-2766 2832 அல்லது அலைபேசி எண்கள் 94434 17949, 94448 04497) புகார் தெரிவிக்கலாம்.மேலும், உர கண்காணிப்பு குழு அனைத்து வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.இத்தகவலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசலு தெரிவித்து உள்ளார்.

## 27th Sep 20012 | பெத்துரெட்டிக்குப்பத்தில்ஒருபரு கரும்பு நாற்றங்கால்

விழுப்புரம்:வேளாண்துறை சார்பில் கரும்பு பயிரில் ஒருபரு நாற்றாங்கால் துவக்க விழா நடந்தது.விழுப்புரம் அடுத்த பெத்துரெட்டிக்குப்பம் கிராமத்தில் ஒருபரு நாற் றங்கால் துவக்க விழா நடந்தது. ஒன்றிய சேர்மன் விஜயாசுரேஷ்பாபு தலைமை தாங்கினார்.துணை சேர்மன் வளர்மதிமணிமாறன், வளவனூர் பேரூராட்சி சேர்மன் முருகவேல், துணைத்தலைவர் தேன்மொழி நாராயணன் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் செல்வசேகர் வரவேற்றார்.வேளாண் இணை இயக்குனர் சேகர், மணிமாறன் ஆகியோரது வயலில் ஒருபரு நாற்றங்கால் நிகழ்ச்சியை சேர்மன் துவக்கி வைத்தார்.வேளாண் துணை இயக்குனர்கள் அன்பழகன், ராஜேந்திரன், ரத்தினசபாபதி, உதவி இயக்குனர் சண்முகம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜசேகரன், ராஜ்ஸ்ரீசர்க்கரை ஆலையின் துணை பொது மேலாளர்கள் சங்கரலிங்கம், லட்சுமணன் ஆகியோர் நீடித்த நிலையான நவீன கரும்பு சாகுபடி குறித்தும், பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் விளக்கமளித்தனர்.
வேளாண் உதவி இயக்குனர் அரிகிருஷ்ணன், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சுரேஷ்பாபு, முன்னாள் ஒன்றிய சேர்மன் சாரங்கன், ஜெ., பேரவை ஒன்றிய செயலாளர் மணிமாறன் பங்கேற்றனர்.

## 27th Sep 20012 | தொழில் நுட்ப அலுவலர்கள் சங்கத்தினர் வேளாண் இணை இயக்குனருடன் சந்திப்பு

விழுப்புரம்:விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் சேகர் மற்றும் வேளாண் அதிகாரிகளை தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தினர் சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தினர்.தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்க கூட்டம் நடந்தது. இதில் விழுப்புரம் மாவட்டத் தலைவராக தென்னரசு, செயலாளராக சந்திரசேகரன் மற்றும் நிர்வாகிகள் தேர்வாகினர்.பின், விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் சேகர் மற்றும் தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு, வேளாண் வணிகத் துணை இயக்குனர் சண்முகத்தை சந்தித்து

கோரிக்கை மனுவை அளித்தனர்.சந்திப்பின் போது, மாயன், மாவட்ட பொரு ளா ளர் தேவநாதன், அமைப்பு செயலாளர் சுரேஷ், துணைத் தலைவர்கள் கிருஷ்ணா, சிவசங்கர், இணை செயலாளர் மணிவண்ணன், தணிக்கையா ளர் ராஜா உடனிருந்தனர்.மனுவில், புதிதாக பணி அமர்த்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு பணிவரன்முறை மற்றும் காலமுறை ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுவில் கூறியுள்ளனர்.கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்டு, பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுத்து ஆணை வழங்குவதாக உறுதியளித்தனர்.கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்த அதிகாரிகளுக்கு, சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

| 27th Sep 20012 | விதை விற்பனை செய்ய 3 கடைகளுக்கு தடை |
|---|---|

சேலம்: காலாவதியான விதைகள் இருப்பு வைத்திருந்ததற்காக, மூன்று கடைகளில் விதை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் தலைமையில், விதை ஆய்வாளர்கள் வெங்கடேசன், கவுதமன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்களில், ஆய்வு செய்தனர்.கொளத்தூரில் 12, மேட்டூரில் எட்டு, மேச்சேரி பகுதியில், எட்டு விதை விற்பனை நிலையங்களில், ஒரே சமயத்தில் திடீர் ஆய்வு செய்யப்பட்டு, விதைகள் சட்டம் மற்றும் விதை கட்டுப்பாடு ஆணை ஆகியவற்றின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.காலாவதியான விதைகள் இருப்பு வைத்திருந்ததற்காவும், சரியான முறையில் இருப்பு மற்றும் ஆவணங்கள் பராமரிக்காததற்காவும், லேபிள் குறைபாடு காணப்பட்டதற்கும், மூன்று கடைகளில், விதை விற்பனை செய்ய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் மூலம், ஒரு லட்சத்து, 18 ஆயிரம் மதிப்புள்ள, 848 கிலோ நெல் விதைகள் மற்றும், 46 கிலோ பி.டி.பருத்தி விதைகள் ஆகியவை விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் கூறியதாவது:விதை விற்பனையாளர்கள், விவசாயிகளுக்கு தெளிவாக விளங்கும் வகையில், இருப்பில் உள்ள அனைத்து விதைகளின் ரகங்கள், அளவு, விலை ஆகிய விபரங்களை தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும். காலாவதியான விதைகளை விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறினார்.

| 27th Sep 20012 | விலை குறைத்து உரம் வழங்கணும் மகாசபை கூட்டத்தில் கோரிக்கை |
|---|---|

மோகனூர்: "பயோ கம்போஸ்ட் உரத்தை, தற்போது வழங்கும் ஒரு டன் விலையான, 500 ரூபாயில் இருந்து, கரும்பு விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், ஒரு டன், 250 ரூபாயாக

குறைத்து வழங்க வேண்டும்' என, மகாசபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மோகனூர் சர்க்கரை ஆலையில், சிறப்பு மகாசபை கூட்டம் நடந்தது. ஆலை தனி அதிகாரி மலர்விழி தலைமை வகித்தார். பல்வேறு சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் பேசினர்.கூட்டத்தில், கரும்பு பயிரிடுவோர் சங்கச் செயலாளர் நவலடி பேசியதாவது:இந்த ஆலை, 2008 முதல், 2011ம் ஆண்டு வரை, மூன்று அரவை பருவத்திலும் தொடர்ந்து லாபத்தை ஈட்டி உள்ளது. தற்போது, 2011-12ம் ஆண்டிலும் கணிசமான லாபம் ஈட்டுகிற நிலையில், 120 கோடி ரூபாய் வைப்பு நிதியாக தன்னகத்தே கொண்டுள்ளது. நமது ஆலை, இந்த வளர்ச்சியை அடைவதற்கு, கரும்பு விவசாயிகளான நாமும், கரும்பு அரவை செய்த ஆலைத்தொழிலாளர்களும் ஒரு காரணம்.புதிய உறுப்பினர்களை சேர்த்து, ஆலைக்கு கூட்டுறவு தேர்தலை நடத்தி, அங்கத்தினர்கள் பங்கேற்கும் நிர்வாகக் குழுவை ஏற்படுத்த, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தேர்தலை கருத்தில் கொண்டு புதிய உறுப்பினர்களை சேர்ப்பதை, சட்டத்துக்கு உப்பட்டு தடை செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.கூட்டத்தில், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும், பயோ கம்போஸ்ட் உரத்தை, தற்போது வழங்கும் ஒரு டன் விலையான, 500 ரூபாயில் இருந்து, கரும்பு விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், ஒரு டன், 250 ரூபாயாக குறைத்து வழங்க வேண்டும்.நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் ஆலையின் பெயரை, ஆலை அமைந்துள்ள இடமான, மோகனூர் பெயரில் அழைக்கும் விதமாக, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்பதை, "மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம்' என பெயர் மாற்றம் செய்ய, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.மோகனூர் சர்க்கரை ஆலையில் அமைக்கப்பட்டுள்ள இணை மின் உற்பத்தி நிலையத்தில், மின் உற்பத்தியை துவங்கும் காலத்தில், தற்போதுள்ள கரும்பின் அளவு போதுமானதாக இருக்காது. கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கம் நிறைவேற்றப்பட்டது.

**27th Sep 20012** | **கபிலர் மலையில் விதை நெல் இருப்பு அதிகாரி தகவல்**

நாமக்கல்: "கபிலர்மலை வேளாண் விரிவாக்க மையத்தில், போதிய விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:சம்பா பட்டத்துக்கு நாற்றுவிட, போதுமான விதை நெல், கபிலர்மலை வேளாண் விரிவாக்க மையத்தில், இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது, ஆங்காங்கே லேசானது முதல் மிதமான மழை பெய்யத் துவங்கியுள்ளது. அதனால், விவசாயிகள், நெல் நாற்று விடும் பணியை துவக்கியுள்ளனர்.அதற்காக, வேளாண் விரிவாக்க அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள ஆடுதுறை, 45, ஆடுதுறை, 39 ஆகிய நெல் ரகங்கள் இருப்பு வைத்து, மானிய விலையில்

வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. விதை நெல் தேவைப்படும் விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 27th Sep 20012 | அட்மா' ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

லாலாப்பேட்டை: "அட்மா' ஒருங்கிணைப்பு குழு மற்றும் உழவர் நண்பர்கள் கூட்டம், வேளாண்மை உத வி இயக்குனர் பாலகிருஷ்ணன் தலைமையில், மாயனூரில் நடந்தது. கூட்டத்தில், திருந்திய நெல் சாகுபடி முறை, நடவு முறையில் துவரை சாகுபடி, ரசாயன உரம் தட்டுப்பாடின்றி தொடக்க கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடையில் கிடைக்க உரிய நடவடிக்கை எடுத்தல், மு ன்னோடி விவசாயிகளை, வெளிமாநிலத்துக்கு, விவசாய சுற்றுலாவுக்கு அழைத்து செல்லுதல், பயிர் காப்பீடு திட்டம், இடுபொருட்கள் இருப்பு, விநியோகம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. "அட்மா' தலைவர் ராமசாமி உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## 27th Sep 20012 | விவசாய நலத்திட்டம் அறிய கிராம அறிவு மையம் திறப்பு

வேதாரண்யம்: விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு உதவும் வகையில் கடிநெல்வயலில் கிராம அறிவு மையம் திறக்கப்பட்டது.

விவசாயம் மற்றும் மீனவர் நலத்திட்டங்களை அறியும் வகையில், வேதாரண்யம் அடுத்த கடிநெல்வயல் கிராமத்தில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் சார்பில், கிராம அறிவு மையம் திறப்பு விழா நடந்தது. கிராம வனக்குழு தலைவர் முடியப்பன் தலைமை வகித்தார். பஞ்சாயத்து தலைவர் மலர்விழி முன்னிலை வகித்தார்.யூனியன் தலைவர் சுசீலாதேவி குத்துவிளக்கேற்றி வைத்தார். முன்னாள் மயிலாடுதுறை எம்.பி., ராஜேந்திரன் அறிவு மையத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் சிவக்குமார், கிராம மேம்பாட்டுக்குழு பொருளாளர் அம்புரோஸ் மேரி நன்றி கூறினார். "கிராம அறிவு மையத்தின் மூலம் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்கு அரசு நலத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளலாம்' என, ஒருங்கிணைப்பாளர் சிவக்குமார் தெரிவித்தார்.

## 27th Sep 20012 | விளைச்சல் இருந்தும் விலையில்லா மல்லி இலை

தென்காசி:தென்காசி வட்டார பகுதிகளில் அமோக விளைச்சல் இருந்தும் மல்லி இலைக்கு உரிய விலை இல்லாததால் விவசாயிகள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர்.

ஆலங்குளம், சுரண்டை, வீரகேரளம்புதூர், மாறாந்தை, கழுநீர்குளம், ராஜபாண்டி,

மாயமான்குறிச்சி, அத்தியூத்து, கல்லூத்து, கீழப்பாவூர், பாவூர்சத்திரம், கடையம் போன்ற பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வறட்சி நிலவி வந்தபோதும் கிணற்று பாசனம் மூலம் பயரிடப்பட்ட மல்லி இலைகள் அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளது.ஆனால் விளைச்சல் இருந்தும் உரிய விலை இல்லாததால் விவசாயிகள் ஆழ்ந்த கவலையடைந்து காணப்படுகின்றனர். கிலோ ஒன்றுக்கு 90 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வந்த மல்லி இலை தற்போது கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் தெருக்களில் தலைச்சுமட்டாகவும், மொபெட் மூலமாகவும் கூவி கூவி விற்பனை செய்வதை காணமுடிந்தது.விவசாயத்திற்கு செலவு செய்த ரூபாய் கூட மிஞ்சவில்லையே என விவசாயிகள் தெரிவித்தனர்.

| 27th Sep 20012 | மின்வெட்டால் கட்டணமும் உயர்வு : கோழி குஞ்சு பொரிப்பகங்கள் மூடல் |
|---|---|

பல்லடம் :தினமும் ஏற்படும் தொடர் மின்வெட்டால், பல்லடம் பகுதியில் கோழி குஞ்சு பொரிப்பகங்கள் மூடப்பட்டு வருகின்றன. மேலும், பொரிப்பு கட்டணமும் ரூ.1.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.தமிழகத்தில் பல்லடம், உடுமலை, பொள்ளாச்சி, ஈரோடு, ஒசூர், நாமக்கல், நெல்லை உட்பட பல இடங்களில் சிறியதும், பெரியதுமாக 140 கோழி குஞ்சு பொரிப்பகங் கள் உள்ளன. இங்கிருந்து தினமும் சராசரியாக 10 லட்சம் கறிக்கோழி குஞ்சுகள், நாட்டுக் கோழி குஞ்சுகள் பொரிக்கப்பட்டு, பண்ணை களில் வளர்க்க விடப்படுகின்றன.பொரிப்பக இயந்திரங்களில் வைக்கப்படும் முட்டைகள், 21 நாட்களில் குஞ்சுகளாக பொரிந்து, வெளியே வருகின்றன. குஞ்சு பொரிப்புக்கு 24 மணி நேரம் தடையில்லா மின்சாரம் தேவை. ஒரு மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் தடைபட்டால், இயந்திரத்தில் உள்ள முட்டைகளில் குஞ்சுகள் கருவிலேயே இறந்து விடும். இதன் காரணமாக, பொரிப்பகங்களில் மினசாரம் தடைபடும்போது, உடனடியாக ஜெனரேட்டர் இயக்கப்படுகிறது.ஒரு குஞ்சு பொரித்து கொடுக்க ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது. மின் வெட்டு காரணமாக, டீசல் ஜெனரேட்டர் அதிக அளவில் இயக்கப்படுவதால் செலவு அதிகரித்தது. அதனால், பொரிப்பு கட்டணத்தை ரூ.1.30 ஆக உயர்த்தினர். கடந்த ஒரு மாதமாக, சென்னையை தவிர, பிற பகுதியில் தினமும் 10மணி நேரம் முதல் அதிகபட்சம் 14 மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுவதால், குஞ்சு பொரிப்பக உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.ஜெனரேட்டர் மூலம் குஞ்சு பொரிப்பு பணி மேற்கொண்டால், மின்கட்டணத்தை விட கூடுதலாக மூன்று மடங்கு செலவு ஏற்படுவதாக குமுறுகின்றனர். இந்நிலையில், சமீபத்தில் டீசல் விலையும் லிட்டருக்கு ஐந்து ரூபாய் உயர்த்தப்பட்டுள்ள தால் செலவு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, பொரிப்பு கட்டணத்தை ரூ.1.50 ஆக உயர்த்தியுள்ளனர்.என்றாலும்கூட, மின்வெட்டுக்கு தாக்குபிடிக்க முடியாமல், 20

சிறிய பொரிப்பகங்கள் வரை மூடப்பட்டுள்ளன. குஞ்சு பொரிப்பு கட்டணம் உயர்வு காரணமாக, கறிக்கோழி, நாட்டுக்கோழி கொள்முதல் விலை யும் கிலோவுக்கு குறைந்தபட்சம் இரண்டு ரூபாய் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள் ளது. எனவே, குஞ்சு பொரிப்பகங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கி னால் மட்டுமே, இத்தொழில் தப்பிக்கும் என அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

26.09.2012 P.M

27.09.2012 A.M

27th Sep 20012

## தென்னை சாகுபடியில் புதிய விரிவாக்க தொழில்நுட்ப முயற்சிகள்



சிதம்பரம்: தென்னை சாகுபடி விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக அதிகளவு சவால்களையும், பிரச்னைகளையும் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக தென்னை சாகுபடியில் ஈடுபட்டு வரும் சிறு மற்றும் குறு விவசாயிகளை தானே புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள், அதிகரித்து வரும் உற்பத்திச் செலவுகள், குறைந்து வரும் கொள்முதல் விலை போன்ற அதிகளவு பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் தென்னை சாகுபடியில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் தென்னை வாரியத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் தென்னை நண்பர்கள் திட்டம் மிகப்பெரிய அளவில் கிராமப்புறங்களில் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

இது குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

தென்னை மரம், வளர்க்கவும், உருவத்திலும் பிற மரங்களைக் காட்டிலும் வேறுபாடு கொண்டது. கிளைகள் இல்லாத காரணத்தால் மரத்தில் ஏறுவது கடினம், பாரம்பரியமாக குறிப்பிட்ட சிலரே மரம் ஏறிவரும் நிலை உள்ளது. தற்போது உள்ள இளைய சமுதாயத்தினர் கல்வி அறிவு பெற்றுவிட்ட சூழலில் தென்னை மரம் ஏற அனுபவம் உள்ள வயதானவர்களை மட்டுமே நம்ப

வேண்டியது உள்ளது. பல மாவட்டங்களில் மரமேறிகளின் பற்றாக்குறைக் காரணமாக தேங்காய்களைப் பறிக்க முடியாத நிலைகூட நிலவுகிறது.
இத்தகைய சூழலில் கேரள மாநிலம் கோழிக்கோடு மார்வில் இன்டஸ்டிரீஸ் வடிவமைத்துள்ள மரமேறும் கருவி தென்னை சாகுபடியில் மிகப்பெரிய தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஏற்படச் செய்துள்ளது. தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தென்னை மரமேறும் கருவிகள் வாயிலாக மரமேறும் பணி எளிமையாக்கப்பட்டுள்ளது. யார் வேண்டுமானாலும் தென்னை அறுவடையில் ஈடுபட முடியும்.
தற்போது தென்னை வளர்ச்சி வாரியம் தென்னை மரங்களின் நண்பர்கள் என்ற திட்டத்தின் வாயிலாக மரமேறும் கருவிகளைக் கொண்டு மரமேறும் பயிற்சிகளை செயல்படுத்தி வருகிறது. கடந்த 17-3-2011 முதல் செயல்படுத்தப்பட்டும் இப்பயிற்சியில் 18 வயது முதல் 40 வயது வரையிலான ஆரோக்கியமான இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.
÷வேலையில்லாத 7-ம் வகுப்பு வரை படித்த இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் இப்பயிற்சி திட்டத்தில் 20 சதவீத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 20 பேர் அடங்கிய ஒரு குழுவுக்கு 6 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியாளர்கள் ஒரே இடத்தில் தங்கிப் பயிற்சியைப் பெற வேண்டும்.
இப்பயிற்சியில் தென்னை மரமேறும் தொழில் பயிற்சி, தேங்காய்களை அறுவடை செய்வது, தென்னை மரங்களின் தலைப்பகுதியை சுத்தம் செய்தல், பூச்சி மற்றும் பூஞ்ஞாணக் கொல்லிகளைத் தெளித்து தென்னையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தென்னைகளில் செயற்கை முறையில் மகரந்த சேர்க்கை செய்வது மற்றும் வீரிய ஒட்டு தென்னைகளை உருவாக்கக் கூடிய தொழில்நுட்பம் சொல்லித் தரப்படுகிறது. இப்பயிற்சியை முடித்த இளைஞர்கள் மற்றும் பெண்கள் மரமேறும் கருவி, இரு சக்கர வாகனம், தொலைபேசிக் கொண்டு விவசாயிகளின் அழைப்பை பெற்று தேங்காய்களை பறித்து தகுந்த கட்டணம் பெறலாம். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.600 முதல் ஆயிரம் வரை பணம் சம்பாதிக்கலாம்.
பிற பயன்கள்: கடந்த ஒரு வருடத்தில் 3 ஆயிரம் தென்னை மர நண்பர்கள் கிராம அளவில் உருவாக்கப்பட்டு கிராமப்புற வேலைவாய்ப்பும் பெற்றும் தென்னை உற்பத்தியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.
தென்னை விவசாயிகள் பல உற்பத்தி பிரச்னைகளுக்கு தீர்வுகள் கிடைப்பதுடன், தென்னை உற்பத்தித் திறன் பெருகியுள்ளது, நகர்புறங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் தென்னை மரங்களில் கூட குறைந்தக் கட்டணத்தில் தேங்காய் மற்றும் இளநீர் அறுவடை செய்யப்படுகிறது.
வேலையில்லாத கிராமப்புற, நகர்ப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பெற அருமையான இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். கிராமப்புற பெண்கள் இத்திட்டத்தில் சேர்ந்து தங்கள் வட்டாரத்துக்குள் செயல்பட்டு அதிகளவு லாபம் பெறலாம்.

எனவே தமிழக தென்னை விவசாயிகள், கிராமப்புற, நகர்புற வேலையில்லாத இளைஞர்கள் மற்றும் பெண்கள் குறுகிய காலத்தில் சுயவேலைவாய்ப்பு பெற இச்சிறப்பான தென்னை மரங்களின் நண்பர்கள் திட்டத்தில் சேர்ந்து
பயன் பெறலாம் என்கிறார் தி.ராஜ்பிரவீன்.

**27th Sep 20012** | **வங்கிக் கடன்களை விவசாயிகள் சரியாக பயன்படுத்த வேண்டும்'**

நாகப்பட்டினம், செப். 25: வங்கிக் கடன்களை விவசாயிகள் சரியாகப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.
நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் அண்மையில் நடைபெற்ற, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் விவசாயக் கடன்கள் வழங்கும் விழாவில் அவர் பேசியது:
நாகை மாவட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகள் மூலம் கடந்த ஆகஸ்ட் முதல் செப்.17-ம் தேதி வரையிலான காலத்தில் ரூ. 10 கோடி விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன்களை விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்கி, குறிப்பிட்ட காலத்தில் வங்கிக் கடன்களை திருப்பி செலுத்த வேண்டும் என்றார் ஆட்சியர் து. முனுசாமி.

இதைத் தொடர்ந்து, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் ரூ. 3 கோடி மதிப்பில் விவசாயிகளுக்கு வேளாண் கடன்களையும், மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதிக்கான காசோலைகளையும் வழங்கினார் ஆட்சியர்.

**27th Sep 20012** | **ஏற்றுமதி வகை திராட்சைகள் ஆராய்ச்சியில் வெற்றி: தோட்டக்கலைத் துறை நாத்துகள் வழங்கவும் திட்டம்**

கம்பம்,செப். 27: கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் பரிசோதனை முறையில் பயிரிடப்பட்ட 10-க்கும் மேற்பட்ட வகையான ஏற்றுமதி ரக திராட்சை உற்பத்தியில் விவசாயிகள் வெற்றி அடைந்துள்ளனர்.
கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கூடலூர், கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, ஆனைமலையன்பட்டி, ராயப்பன்பட்டி, அணைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 100 வருடங்களாக விவசாயிகள் மஸ்கட் பன்னீர் திராட்சை பயிரிட்டு வருகின்றனர். உலகில் இந்தப் பகுதியில் மட்டுமே ஆண்டு முழுவதும் திராட்சை அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், விவசாயிகளுக்கு போதிய விலை

கிடைப்பதிலும், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதிலும் தொடர்ந்து சிக்கல் இருந்து வந்தது.

இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்ட சில திராட்சை விவசாயிகளை தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் மூலம் மகாராஷ்டிர மாநிலம் புணே திராட்சை ஆராய்ச்சி நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு அங்குள்ள 100-க்கும் மேற்பட்ட திராட்சை வகைகளையும், ஏற்றுமதி ரகம், ஓயினுக்கு தேவையான ரக திராட்சைகளுக்கான தொழில் நுட்பங்கள் குறித்தும் பயிற்சி பெறச் செய்தனர்.

இதில் காமயகவுண்டன்பட்டியில் எஸ்.கண்ணன், முருகேஷ்பாபு, சுருளிப்பட்டியில் முகுந்தன் ஆகியோர் தங்களது திராட்சை தோட்டங்களில் புணேயிலிருந்து கொண்டு வரப்பட்ட ஏற்றுமதி ரக ஒட்டு நாத்துக்களை கொண்டு அணுசரணை ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தனர். விவசாயி எஸ். கண்ணன் தோட்டத்தில் சுமார் ஒரு ஏக்கரில் ஏற்றுமதி ரகமான பிளாக் சீட்லெஸ், பிளாக் போல்டு சீட், ரெட் குளோப், மஸ்கட் பிளாக் சீட்லெஸ், பிளாக் சீட்லெஸ், கிரீன் சீடு, பெங்களூர் புளூ, கிஸ்மிஸ் ரோஸ், சரத் சீட்லெஸ் உள்ளிட்ட வகை பயிரிடப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வந்தது. இவை அனைத்தும் வெற்றிகரமாக விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளன.

இது குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை துறை) முத்தையா, தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் ராஜன் ஆகியோர் விவசாயி கண்ணன் திராட்சை மாதிரி தோட்டத்தை பார்வையிட்டனர். பின்னர் அவரிடமிருந்து, ஏற்றுமதி ரக விளைச்சல் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

விவசாயி கண்ணன் கூறியதாவது: தோட்டக்கலை துறையின் மூலம் புணேவுக்கு 4 விவசாயிகள் 2 ஆண்டுகளுக்கு முன்பு சென்று பயிற்சி பெற்றோம். அந்த முறைகளையும், தொழில்நுட்பத்தையும், ஏற்றுமதி ரகம் இந்த பகுதியில் வளருமா என்ற பரிசோதனை முயற்சியில் மேற்கொண்டேன். தோட்டக்கலைத் துறையின் மூலமே தேவையான உதவிகளும், சொட்டுநீருக்கான மானியம் புதிதாக திராட்சை பரப்பளவை விரிவு படுத்த மானியம் உள்ளிட்ட உதவிகள் வழங்கினர். தற்போது ஏற்றுமதி ரக திராட்சை வெற்றி பெற்றுள்ளது. மேலும், நோய் தாக்குதல் குறைவு என்பதால் மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

பின்னர் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்தையா கூறியதாவது: இந்தப் பகுதியில் ஏற்றுமதி ரக திராட்சை விளைவிக்கப்பட்டதில், பயன்படுத்தும் தண்ணீர் அளவு குறைவு, நோய் தாக்குதல் குறைவு, ஏற்றுமதி அதிகரிக்கும்போது விவசாயிகளுக்கு லாபம் அதிகம், தோட்டக்கலை துறை மூலம் சொட்டு நீர் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பறவைகளின் திராட்சையை சேதப்படுத்துவதை கட்டுப்படுத்தும் வகையில் நெட் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எல்லா விவசாயிகளும் ஏற்றுமதி ரக திராட்சை பயிரிட விரும்பினால் தேவையான புதிய ஏற்றுமதி ரக திராட்சை நாத்துகளை வழங்கவும் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்

27th Sep 20012 | மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாயில் தண்ணீர் திறப்பு

மேட்டூர், செப். 26: மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாயில் புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆண்டுதோறும் மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு ஆகஸ்ட் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படும். கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.

நிகழாண்டில் மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தமிழக அரசின் உத்தரவுப்படி, சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக கிழக்கு, மேற்கு கால்வாயில் புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

சேலம் பொதுப் பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் எஸ்.சிவானந்தம் கால்வாய் மதகுகளை உயர்த்தி தண்ணீரை திறந்துவிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

குடிநீர்த் தேவைக்காக மட்டுமே கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் வினாடிக்கு 400 கன அடி வீதம் திறக்கப்படும் தண்ணீர் 700 கன அடி வரை அதிகரிக்கப்படும். தொடர்ந்து 15 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என்றார் அவர்.

8 நாள்களில் 6 அடி குறைந்தது: காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாத காரணத்தாலும், தமிழகத்துக்கு திறந்துவிட்ட தண்ணீரை கர்நாடகம் நிறுத்தியதாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1500 கன அடியாக குறைந்துள்ளது.

பாசனத்துக்கு விநாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறையத் தொடங்கியது.

புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.93 அடியாகக் குறைந்தது. செப்டம்பர் 18-ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 84.71 அடியாக இருந்தது. கடந்த எட்டு நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5.78 அடி குறைந்துள்ளது.

இப்போது மேட்டூர் அணையில் இருப்பு உள்ள தண்ணீர் 15 முதல் 20 நாள்களுக்கு மட்டுமே பாசனத்துக்கு போதுமானதாக உள்ளது.

26th sep 2012 P.M

| 26th Sep 20012 | இஜடி பாரி சாதனை: 10 லட்சம் டன் கரும்பு அரைவை |
|---|---|

அறந்தாங்கி, செப். 25: அறந்தாங்கி குரும்பூர் இ.ஐ.டி பாரி சர்க்கைரை ஆலை நடப்பு ஆண்டில் 10 லட்சம் டன் கரும்பு அரைவை செய்து சாதனை படைத்து.

இதுகுறித்து ஆலையின் தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன் தெரிவித்தது:

குரும்பூர் ஆலையில் கடந்த நவ.11-ல் தொடங்கி செப்.10 வரை தொடர்ந்து 309 நாட்களில் 10,02,948 டன் அரைவை செய்து சாதனைபடைத்துள்ளது.

இந்த ஆண்டு 36 ஆயிரம் ஏக்கர் கரும்பு நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஆலை தொடங்கப்பட்ட 12 ஆண்டு காலத்தில் முதல் முறையாக அக்டோபர் 10 -ல் ஆலை திறக்கப்படவுள்ளது.

நடப்பு ஆண்டு முதல் கரும்பு நடவு செய்யும் விவசாயிக்கு 1 ஏக்கருக்கு ரூ.30.500 வங்கிக் கடன் வழங்கப்படவுள்ளது. விதைக்கரும்பு நாற்றங்கால் அமைத்த விவசாயிகளுக்கு முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் கரும்பு வெட்டு உத்தரவு தர உள்ளது என்றார்.

ஆலையின் பொறியியல் பிரிவு தலைவர் கே. பூபதி, துணைப் பொது மேலாளர் அ.

புண்ணியமூர்த்தி, கரும்பு அலுவலர் சிவராமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

| 26th Sep 20012 | சம்பா நெல் சாகுபடி செய்து விவசாயிகள் சமுதாய பணியாற்ற அழைப்பு |
|---|---|

தஞ்சாவூர், செப். 25: தஞ்சை மாவட்ட விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்து, சமுதாயப் பணியாற்ற வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்ட கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

தமிழக முதல்வரின் சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டம் குறித்து ஒன்றிய அளவில் ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கடைமடைப் பகுதி விவசாயிகளுக்கும் சிறப்பு தொகுப்பு திட்டத் தகவல்களைக் கொண்டு செல்ல ஏதுவாக ஒன்றிய அளவிலான கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

சம்பா சாகுபடியை விவசாயிகள் தவறாமல் மேற்கொள்வதற்காக தமிழக முதல்வர் விலையில்லா நாற்றுகள் வழங்க மானியம், களை நீக்க மானியம், உழவு மானியம், விதை நுண்ணூட்ட மானியம் எனப் பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கி, சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தை ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காகச் செயல்படுத்தி வருகிறார்.

இந்தத் திட்டத்தை தஞ்சை மாவட்ட விவசாயிகள் முறையாகப் பயன்படுத்தி சம்பா சாகுபடியை சிறப்பாக செய்ய வேண்டும். மேலும், விடுப்பட்ட குறுவை பரப்பையும் சேர்த்து தவறாமல் சம்பா சாகுபடியில் ஈடுபட்டு தமிழகத்திற்கு தேவையான உணவு உற்பத்தியை செய்து சமுதாய பணியாற்ற வேண்டும் என்றார் ஆட்சியர்.

பூதலூர் ஒன்றியக் குழுத் தலைவர் மணிகேமலை திருஞானசம்மந்தம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் எம்.இசட். முகமது யாகியா, துணை இயக்குநர் ராமதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேபோல, தஞ்சாவூர், திருவையாறு ஒன்றியங்களிலும் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

| 26th Sep 20012 | மண்புழு உரத் தொட்டிக்கு 50% மானியம் |
|---|---|

செய்யாறு, செப். 25: வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மண்புழு உரத் தொட்டி அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

2012ஆம் ஆண்டுக்கான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு மண்புழு உரத் தயாரிப்புத் தொட்டி அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

அதே போல இத்திட்டத்தின் கீழ், பசுந்தாள் உர விதைகள், தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

விவசாயிகள், தங்களது புகைப்படம் மற்றும் நில ஆவணங்களுடன் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் விண்ணப்பித்து பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

26.09.2012 P.M

27.09.2012 A.M

27th Sep 20012

## மஞ்சள் விலை ஒரே மாதத்தில் ரூ.1000 வரை சரிவு



ஈரோடு : கடந்த மாதம் ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் தனியார் மஞ்சள் மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் ரூ.6,200 முதல் ரூ.6,800 வரையிலும் விலை போனது. ஒரு குவிண்டால் ரூ.9 ஆயிரம் என விலை நிர்ணயம் செய்த மஞ்சள் வியாபாரிகள் சங்கத்தினர் அதற்கு குறைவாக விற்பதில்லை என அறிவித்திருந்தனர்.

ஆனால் ஒருமுறை கூட ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.9 ஆயிரத்துக்கு விலை போகவில்லை. மாறாக மஞ்சள் விலை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகிறது.
தற்போது அதிகபட்சமாக விரலி மஞ்சள் ரூ.5,865க்கு தான் விலை போகிறது. ஒரே மாதத்தில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.1,000 வரையிலும் சரிவடைந்திருப்பது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் ரூ.4,599 முதல் அதிகபட்சமாக ரூ.5,865க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.4,569 முதல் அதிகபட்சம் ரூ.5,443க்கும் விலை போனது. தனியார் மஞ்சள் உரிமையாளர் கிடங்கில் நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரூ.3,209 முதல் அதிகபட்சமாக ரூ.5,699க்கும், மஞ்சள் கிழங்கு ரூ.3,096 முதல் அதிகபட்சமாக ரூ.5,386க்கும் விலை போனது.

மீதமுள்ள மஞ்சள் கட்டுபடியாகாத விலை காரணமாக விவசாயிகளால் இருப்பு வைக்கப்பட்டது.

27th Sep 20012

## கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை வேளாண் அதிகாரி எச்சரிக்கை

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாப்பக்காபட்டி, ஓமாந்தூர் பகுதிகளில் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்பட்டுள்ள துவரை நடவு முறை சாகுபடி பயிரினை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெய்வேந்திரன் ஆய்வு செய்தார். துவரை நடவு முறை சாகுபடி குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார். பயிர் பராமரிப்பு குறித்து களப்பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பின்னர் பஞ்சப்பட்டி, போத்துராவுத்தன்பட்டி, இரும்புலிபட்டி, லாலாபேட்டை மற்றும் கிருஷ்ணராயபுரம் பகுதிகளின் உரக்கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். உர உரிமம், உர இருப்பு, விற்பனை விலை ஆகியன சரிபார்க்கப்பட்டது. மேலும் உர விற்பனை மேற்கொள்ளும் போது உர மூட்டையின் மேலுள்ள விலைக்கே விற்பனை செய்ய வேண்டும். கூடுதல் விலைக்கு எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாது என்று விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. உர விற்பனை விதிமுறைகளுக்கு மாறாக விற்பனை செய்தால் உரக்கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

ஆய்வின் போது மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சுப்பிரமணியன், தோட்டக்கலை துணை இயக்குநர் சதாசிவம் மேலாண்மை உதவி இயக்குநர் தரக்கட்டுப்பாடு சிவானந்தம் மற்றும் கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் பாலகிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர். ஏற்பாடுகளை துணை வேளாண்மை ஆய்வாளர் ராஜவேலு மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் முருகானந்தம் ஆகியோர் செய்திருந்தனர்.

27th Sep 20012

## கரூரில் முலாம் பழம் விற்பனை விறுவிறுப்பு

கரூர், : கரூரில் முலாம் பழம் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.
கரூர் பகுதியில் கோடைகாலம் முடிந்தும் தற்போது வெயில் கடுமை யாக கொளுத்துகிறது. கடந்த மாதம் நன்றாக அடித்த காற்றும் தற்போது குறைந்துவிட்டது. இதனால் சுட்டெரிக்கும் வெப்பத்தை சமாளிப்பதற்காக மக்கள் இளநீர், பழங்களை வாங்கி வருகின்றனர். ஆப்பிள், மாதுளை போன்ற பழங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.
இதனால் தர்பூசணி பழங்கள், கரும்புச்சாறு, முலாம் பழம், வெள்ளரி போன்றவற்றை அதிக அளவில் உட்கொள்கின்றனர். கரூர் பகுதியில் தர்பூசணி பழங்கள் விற்பனை கடந்த 2 மாதமாக இல்லை. வரத்து இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.
கிலோ ரூ.10க்கு விற்பனையானதால் தண்ணீர் தாகத்திற்காக தர்பூசணியை அதிகம் நாடினர். தற்போது, முலாம்பழங்கள் அதிக அளவில் விற்பனைக்கு வந்துகொண்டிருப்பதால் அதனை விற்பனை செய்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பெரிய கடைகளில் கிலோ ரூ.20க்கும், சிறிய கடை களில் கிலோ ரூ.30க்கும் விற்பனையாகிறது. கரூர் பஸ்நிலையம், ஈஸ்வரன்கோயில், ஆசாத் சாலை, சுங்ககேட், தாந்தோணி மலை, பசுபதிபாளையம், வெங்கமேடு போன்ற பகுதிகளில் பழக்கடைகளில் முலாம்பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருக்கின்றன.
வரத்து அதிகம் காரணமாக தள்ளுவண்டிகளிலும் முலாம் பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. ஜூஸ் தயாரிப்பதற்காக முலாம் பழங்களை பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர்.

27th Sep 20012

## அரவக்குறிச்சியில் விதை உற்பத்தியாளர் பயிற்சி முகாம்

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சியில் அரசு விதை உற்பத்தியாளர்கள் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது.
அரவக்குறிச்சி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விதைச் சான்றுத்துறை மூலம் அரசு விதை உற்பத்தியாளர்கள் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது. கரூர் வேளாண் உதவி இயக்குநர் கைலாசபதி தலைமை வகித்தார். விதைச்சான்று அலுவலர் தண்டபாணி வரவேற்றார். கரூர் விதைச்சான்று உதவி இயக்குநர் சேகர் முன்னிலை வகித்தார்.
கரூர் வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் வளர்மதி, தரமான விதை உற்பத்தி செய்யும் நவீன முறைகள் பற்றி பேசினார். கரூர் விதைச்சான்று அலுவலர் தண்டபாணி,

விதைப்பண்ணை பதிவு செய்யும் முறைகள், வயல் ஆய்வு பற்றி விளக்கினார். குளித்தலை விதைச்சான்று அலுவலர் தியாகராஜன், விதைப்பண்ணைக்கு சுத்திஅறிக்கை வழங்குதல், சுத்தப்பணி மற்றும் சான்றுப்பணிகள் குறித்து விளக்கமளித்தார்.
கரூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் வெங்கட்ராமன், விதை பரிசோதனையின் அவசியம், பரிசோதனை முறைகள் பற்றி பேசினார். முகாமில் அரவக்குறிச்சி மற்றும் பரமத்தி வட்டார வேளாண்மைத்துறை, தோட்டக்கலை துறை, வேளாண் வணிகத்துறை மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

| 27th Sep 20012 | நாமகிரிப்பேட்டையில் ரூ60 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் |
|---|---|

நாமகிரிப்பேட்டை, : நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிப்பேட்டையில் மிகப்பெரிய மஞ்சள் மார்க்கெட் உள்ளது. இங்கு ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் உட்பட 18 தனியார் மண்டிகளில் வாரந்தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.
கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் விரலி ரகம் குவிண்டால் ரூ5,300 முதல் ரூ7,600 வரை ஏலம் போனது. உருண்டை ரகம் அதிகபட்சமாக ரூ6000க்கும், குறைந்தபட்சமாக ரூ5,200க்கும் விலை போனது. விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட 1700 மூட்டைகள் சுமார் ரூ60 லட்சத்திற்கு விற்கப்பட்டது. தனியார் மண்டிகளில் ரூ6000 முதல் ரூ7000 வரை மஞ்சள் ஏலம் விடப்பட்டது. அனைத்து மண்டிகளிலும் 5000 மஞ்சள் மூட்டைகள் விற்பனையானது.
நாமகிரிப்பேட்டை தனி யார் மண்டிகளில் வாரந்தோறும் செவ்வாய் இரவு மஞ்சள் ஏலம் தொடங்கி விடிய, விடிய நடக்கும். ஆனால், நேற்று முன்தினம் பகல் 11 மணிக்கு தொடங்கிய ஏலம் மாலைக்குள் முடிந்துவிட்டது. கூட்டுறவு சங்கத்தில் மட்டும் மாலை தொடங்கி வழக்கம்போல் நடந்தது.

| 27th Sep 20012 | பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது |
|---|---|

ஈரோடு, : பவானிசாகர் அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்ததை அடுத்து காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.
பருவமழை பொய்த்து போனதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சரிந்து காணப்படுகின்றது. அணையில் தற்போது 41.25 அடி தண்ணீர் உள்ளது. இந்நிலையில்

கீழ்பவானி வாய்க்காலில் ஒரு மாதகாலத்திற்கு உயிர் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் அணையில் இருந்து வினா டிக்கு 2 ஆயிரம் கனஅடி வெளியேற்றப்பட்டுவருகின்றது. ஆனால் அ¬ ணக் கு வரும் தண்ணீரின் வரத்து அடியோடு குறைந்துவிட் டது. கடந்த இரண்டு நாட் களாக வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் மட்டுமே வந் து கொண்டிருந்த நிலையில் நேற்று மாலை சற்று அதிகரித்து வினாடிக்கு 683 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனிடையே காலிங்கராயன் பாசனத்திற்காக பவானி ஆற்றில் இருந்து 1100 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது. தற்போது அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்துவிட்டதால் காளிங்கராயனுக்கு திறந்துவிடப்பட்டிருந்த தண்ணீர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குடிநீர் தேவை க்காக மட்டும் பவானி ஆற்றில் 350 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்தால் மட்டுமே காலிங்கராயன் வாய்க்கலுக்கு மீண்டும் திறந்துவிட முடியும் என்றும் கீழ்பவானி வாய்க்காலுக்கு இன்னும் 20 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்துவிடப்படும் என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

27th Sep 20012

## பண்ணை மகளிர் குழுக்களுக்கு புளி மதிப்பு கூட்டுதல் பயிற்சி

தேன்கனிக்கோட்டை, : தளி மற்றும் கெலமங்கலம் வட்டார கிராமங்களில் விவசாயிகள் புளி, ராகியை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். வேளாண் வணிகத்துறை மூலம், விவசாயிகளிடம் பயிர் குழு அமைத்து, பல்வேறு விவசாய விளைபொருட்களை கொண்டு மதிப்புக்கூட்டு பொருட்கள் தயார் செய்தல், வேளாண் சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், வணிக முறை தரம் பிரித்தல், சந்தை விலை நிலவரங்கள் அறிந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
இதையொட்டி தேன்கனிக்கோட்டை அருகே கொத்தூர் கிராமத்தில், டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்மை வணிகத்துறை மூலம் பண்ணை மகளிர் குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் நொகனூர் ஊராட்சி மன்றத் தலைவி நாகரத்தினா மற்றும் மகளிர் குழுவினர், விவசாயிகள் கலந்து கொண்டனர். டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில் நுட்ப வல்லுனர் பூமதி, புளியை மூலதனமாக கொண்டு புளிதொக்கு, ஊறுகாய், பேஸ்ட் போன்றவை தயாரிப்பு தொடர்பான செயல்முறை விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்கவேல், அன்பழகன் ஆகியோர் தரம் பிரித்தல், சந்தை பிரித்தல் தொடர்பான பல்வேறு விளக்கங்களை அளித்தனர்.

26th sep 2012 P.M

26th Sep 20012

## வாழை இலை விலை வீழ்ச்சி

திருப்புவனம், : வாழை இலை விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் திருப்புவனம் வட்டார விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

திருப்புவனம், திருப்பாச்சேத்தி, கானூர், மடப்புரம், மாரநாடு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் வாழை பெருமளவு பயிரிடப்பட்டு வருகிறது. மதுரை மார்க்கெட்டின் மொத்த வாழை தேவையை பூர்த்தி செய்வது இப்பகுதி வாழை விவசாயிகள் தான். நாட்டு வாழை, ஒட்டு வாழை, ரஸ்தாளி, பச்சை உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் இங்கு பயிரிடப்பட்டுள்ளன. இருப்பினும் குறைந்த முதலீடு, பராமரிப்பு குறைவு என்பதால் விவசாயிகள் நாட்டு வாழைகளை அதிகம் பயிரிட்டுள்ளனர். மதுரை மார்க்கெட்டில் நாட்டு வாழை இலைகளுக்கு கிராக்கி அதிகம். மற்ற பகுதி வாழை இலைகள் எளிதில் வாடி விடும். ஆனால் திருப்பாச்சேத்தி பகுதியில் வெட்டப்படும் வாழை இலைகள் ஒரு வாரம் வரை வாடாது. எனவே மொத்த வியாபாரிகள் திருப்பாச்சேத்தி வாழை இலை களை விரும்பி வாங்கி செல்கின்றனர். 100 இலைகள் கொண்ட வாழை இலை கட்டு கடந்த மாதம் வரை ரூ.300க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ஒரு கட்டு ரூ.100 முதல் ரூ.150 வரையே விற்பனையாகிறது. வாழை இலை விலை ஒரு மாதத்தில் பாதிக்கும் மேல் குறைந்து விட்டதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கடந்த 2 வாரங்களாக திருப்பாச்சேத்திக்கு வாழை இலை கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரிகள் வருவதில்லை. இதனால் விவசாயிகள் வாழை இலை அறுப்பதை நிறுத்தி விட்டனர். வாழைத்தார்களை வெட்டிய பின்னரே வழக்கமாக இலைகளை அறுப்பார்கள். பொதுவாக முகூர்த்த தினங்கள், விரத நாட்களில் வாழை இலைகளின் தேவை அதிகரிக்கும். தற்போது புரட்டாசி மாதம் துவங்கிய பின்னரும் வாழை இலையின் விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. விவசாயிகள் கூறுகையில், “வாழைத்தாரின் விலையும் பெருமளவு குறைந்து விட்டது. 200 காய்கள் கொண்ட தார் ரூ.300க்கு விற்கப்பட்டது. தற்போது ரூ.100 ஆக குறைந்து விட்டது. சில்லரை விற்பனையில் வாழைப்பழம் ஒன்று ரூ.5 என விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மொத்த வியாபாரிகள், விவசாயிகளிடம் மிக குறைந்த விலையில் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். வாழைத்தார் விலை குறைந்தாலும் வாழை இலை விற்பனையில் ஓரளவு இழப்பை ஈடுகட்டி விடுவோம். தற்போது இலைகளின் விலையும் குறைந்ததால், ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை செலவு செய்துள்ளதால் பெரும் இழப்பு ஏற்படும். பெரும்பாலான விவசாயிகள் வாழை பயிரிடுவதை விட்டு விட முடிவு செய்துள்ளனர்“ என்றார்.

26th Sep 20012

## வாழை இலை விலை வீழ்ச்சி

சிதம்பரம், : தமிழக உழவர் முன்னணியின் கடலூர் மாவட்ட செயலாளர் ஆறுமுகம், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழக விவசாயிகள் குறுவை சாகுபடியை இழந்துவிட்ட நிலையில் சம்பா பயிரை ஓரளவுக்கு மீட்கும் நடவடிக்கையாக தமிழக அரசு விவசாயிகளுக்கு 12மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கும் என அறிவித்தது.

சமுதாய நாற்றங்கால் திட்டத்தையும் நேரடி நெல்விதைப்பையும் பரிந்துரைத்தது.

தமிழக அரசின் அறிவிப்பை நம்பி சமுதாய நாற்றங்காலிலும், ஆழ்குழாய் பாசன விவசாயிகள் நாற்றங்காலில் நெல்விதைத்தும் பணியை துவக்கினார்கள். நாற்றங்காலும் 10 முதல் 15நாட்கள் வளர்ச்சியில் உள்ளன.

இந்நிலையில் திடீரென தமிழ்நாடு மின்சார வாரியம் நாள்தோறும் 2மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரத்தை வழங்கத் தொடங்கியுள்ளது. இதனால் நாற்றங்காள் காய்வதோடு மேற்கொண்டு நடவு செய்யவேண்டிய நிலங்களை உழமுடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்னர்.

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியை போக்க தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க மின்சார வாரியத்திற்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

27.09.2012 A.M

| 27th Sep 20012 | பெருந்துறை வேளா மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.46 லட்சத்துக்கு கொ பரை தேங்காய் விற்பனை |
|---|---|

பெருந்துறை வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.46 லட்சத்துக்கு கொ பரை தேங்காய் விற்பனையானது.

கொ பரை தேங்காய்

பெருந்துறை வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொ பரை தேங்காய் சிற பு ஏலம் நடைபெற்றது.

நேற்று நடந்த ஏலத்துக்கு மொத்தம் 512 மூட்டைகள் கொ பரை தேங்காய் விற்பனைக்கு கொ டு வர பட்டு இருந்தன. இவற்றின் மொத்த எடை ஒரு லட்சத்து 29 ஆயிரம் கிலோ ஆகும்.

ரூ.46 லட்சத்துக்கு ஏலம்

இதில் முதல் தரமான கொ பரை தேங்காய் 35 ரூபாய் 55 காசு முதல் 37 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. இர டாம் தரம் கிலோவுக்கு 29 ரூபாய் 90 காசு முதல் 35 ரூபாய் 15 காசு வரை ஏலம் போனது.

இந்த ஏல விற்பனை விலை கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் கிலோவுக்கு 2 ரூபாய் விலை குறைந்தது. நேற்று நடந்த ஏலத்தில் கொ பரை தேங்காய் ரூ.46 லட்சத்துக்கு விற்பனையானது.

| 27th Sep 20012 | பூத பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.13 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை |
|---|---|

பூத பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், ரூ.13 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

தேங்காய்...

பூத பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாய விளைபொருட்கள் விற்பனையானது. மொத்தம் 14 ஆயிரத்து 710 தேங்காய் கொ டுவர பட்டு இருந்தது. சிறிய தேங்காய் 2 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் 6 ரூபாய் 70 காசுக்கும் ஏலம் போனது. 43 ஆயிரத்து 966 ரூபாய்க்கு தேங்காய் விற்பனையானது.

கொ பரை தேங்காய் 302 மூட்டைகள் கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்த பட்ச விலையாக 2 ஆயிரத்து 900 ரூபாய்க்கும், அதிக பட்ச விலையாக 3 ஆயிரத்து 700 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 3 லட்சத்து 70 ஆயிரத்து 298 ரூபாய்க்கு கொ பரை தேங்காய் விற்பனையானது.

நிலக்கடலை

நிலக்கடலை 388 மூட்டைகள் கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்த பட்ச விலையாக 2 ஆயிரத்து 630 ரூபாய்க்கும், அதிக பட்ச விலையாக 3 ஆயிரத்து 630 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 5 லட்சத்து 20 ஆயிரத்து 232 ரூபாய்க்கு நிலக்கடலை விற்பனையானது.

நெல்

நெல் 61 மூட்டைகள் கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்த பட்ச விலையாக ஆயிரத்து 893 ரூபாய்க்கும், அதிக பட்ச விலையாக 2 ஆயிரத்து 23 ரூபாய்க்கும் ஏலம் போனது.

ஏ.டி.டி. 39 ரகம் குவி டால் குறைந்த பட்ச விலையாக ரூ.1,715–க்கும், அதிக பட்ச விலையாக ரூ.1,792–க்கும் ஏலம் போனது.

மொத்தம் 83 ஆயிரத்து 216 ரூபாய்க்கு நெல் விற்பனையானது.

மக்காச்சோளம்

மக்காச்சோளம் 235 மூட்டைகள்கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்த பட்ச விலையாக ஆயிரத்து 292 ரூபாய்க்கும், அதிக பட்ச விலையாக ஆயிரத்து 327 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 3 லட்சத்து 2 ஆயிரத்து 680 ரூபாய்க்கு மக்காச்சோளம் விற்பனையானது.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 13 லட்சத்து 20 ஆயிரத்து 392 ரூபாய்க்கு விவசாயவிளைபொருட்கள் விற்பனையானது.